# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2021/27 - 2017 මැයි මස 31 වැනි බදාදා - 2017.05.31

*2021/27 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 3/2016*

***1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, அங்கவீனமுற்ற ஆட்களின் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம்***

*1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, அங்கவீனமுற்ற ஆட்களின் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் 12 ஆம் இலக்க மற்றும் 13 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 26 ஆம் பிரிவின் கீழ் அங்கவீனமுற்ற ஆட்களுக்கான தேசிய பேரவையினால் ஆக்கப்பட்ட விதிகள்.*

தவிசாளர்,
அங்கவீனமுற்ற ஆட்களுக்கான
தேசிய பேரவைக்காகவும் அதன்
சார்பிலும்.

கொழும்பு,
*2017, மே 30.*

விதிகள்

*1.* இவ்விதிகள் 2017 ஆம் ஆண்டின் ....... ஆம் இலக்க, வெள்ளைப்பிரம்பு விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2.* பார்வையற்ற அல்லது கட்புலரீதியில் குறைபாடுடைய ஆளொருவருக்கு தமது அடையாளத்தையும் பாதுகாப்பையும் சுட்டிக்காட்டுவதற்கு வெள்ளைப்பிரம்பை கொண்டு செல்வது அல்லது பயன்படுத்துவது விரும்பத்தக்கதாகும்.

ஆயின் எவ்வாறாயினும், இவ்விதியில் அடங்கியுள்ளதெதுவும் ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அளிக்கப்பட்ட உரிமைகள் மற்றும் சிறப்புரிமைகளை அத்தகைய பிரம்பைக் கொண்டு செல்லாது பார்வையற்ற அல்லது கட்புலரீதியில் குறைபாடுடைய ஆள் இழக்கின்றவராக பொருள் கொள்ளப்படலாகாது.

*3.* வெள்ளைப் பிரம்பொன்றைப் பயன்படுத்துகின்ற பார்வையற்ற அல்லது கட்புலரீதியில் குறைபாடுடைய ஆள் ஒருவர் அவரது கட்புல ரீதியிலான குறைபாட்டை எண்பிப்பது போன்று மருத்துவச் சான்றிதழ் ஒன்றை கொண்டு செல்லலாம்.

*4.* (அ) அடியில் சிவப்பு நிறம் கொண்ட நீண்ட வெள்ளைப் பிரம்பொன்று பார்வையற்ற அல்லது கட்புலரீதியில் குறைபாடுடைய ஆள் ஒருவரினால் பயன்படுத்தப்படலாம் ;

(ஆ) பந்தி (அ) வில் குறிப்பீடு செய்யப்பட்ட பிரம்புகளின் வகைகள் பின்வருவனவாக இருக்கலாம்.

(i) திடமானதாக ; அல்லது

(ii) மடித்துவைக்கக்கூடியதாக,

இது பயன்படுத்துவோரின் முன்னாலுள்ள இடத்திற்கு செல்வதற்கு உதவலாம்.

(இ) பயன்படுத்தப்படும் வெள்ளைப் பிரம்பு வகையானது ஆளினுடைய கட்புலரீதியிலான குறைபாடு, வயது உயரம் மற்றும் வேறு குறித்த தேவைகள் என்பவற்றில் தங்கியிருக்கலாம்.

(ஈ) பிரம்புப் பாவனை மற்றும் பயணிக்கும் திறன் என்பவற்றுக்கான பயிற்சியானது சான்றுப்படுத்தப்பட்ட திசைப்படுத்துகை மற்றும் இயக்க நிலை விசேட நிபுணர் ஒருவரால் வழங்கப்படலாம்.

5. பார்வையற்ற அல்லது கட்புலரீதியில் குறைபாடுடைய ஆள் வெள்ளை நிற அல்லது சிவப்பு நிறத்துடன் வெள்ளை நிற நுனியைக் கொண்ட பிரம்பு அல்லது கைத்தடி ஒன்றை உயர்த்தப்பட்ட அல்லது நீட்டிய நிலையில் கொண்டு செல்கின்றவராக, ஒரு வழியை கடப்பதற்கு அல்லது கடப்பதற்கு எத்தனிக்கின்ற போதெல்லாம், அப்பாதசாரி எந்த இடத்தைக் கடக்கின்றாரோ அல்லது கடப்பதற்கு எத்தனிக்கின்றாரோ அந்த இடத்தை அணுகுகின்ற ஒவ்வொரு வாகனத்தின் சாரதியும் அத்தகைய பாதசாரிக்கு ஊறுவிளைவிப்பதை தடுப்பதற்கு அவசியமாக இருக்கக் கூடியவாறான அத்தகைய முற்காப்புக்களை எடுத்தல் வேண்டும்.

6. (அ) பார்வையற்ற மற்றும் கட்புலரீதியில் குறைபாடுடைய ஆட்கள் தெருக்களை, நெடுஞ்சாலைகளை, நடைபாதையோரங்களை, பொதுக்கட்டிடங்களை, பொதுவசதிகளை மற்றும் வேறு பொது இடங்களை முழுமையாகவும் சுதந்திரமாகவும் பயன்படுத்துவதற்கு உடற்குறைபாடற்றோர் போன்று அதே உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(ஆ) சட்டத்தினால் தாபிக்கப்பட்டதும் எல்லா ஆட்களிற்கும் ஏற்புடையற்பாலதுமான ஏதேனும் நிபந்தனைக்கு அல்லது வரையறைக்கு அமைய பார்வையற்ற மற்றும் கட்புல ரீதியில் குறைபாடுடைய ஆட்கள், எல்லாப் பொது வண்டிகள், வானூர்திகள், மோட்டார் வாகனங்கள், புகையிரத வீதிகள், புகையிரதங்கள், மோட்டார் வசு வண்டிகள், தெருக்கார்கள், வள்ளங்கள் வேறு ஏதேனும் பொது போக்குவரத்துக்கள், அல்லது இடம்பெயர்க்கும் முறைகள், ஹோட்டல்கள், உறைவிடங்கள், பொதுவான தங்குமிடங்கள், கோரிக்கைகள், அல்லது உல்லாசப் போக்கிடங்கள் மற்றும் பொதுமக்கள் அழைக்கப்படுகின்ற வேறு இடங்கள் என்பவற்றின் முழுமையானதும் சமமானதுமான தங்குமிடவசதிகள் அனுகூலங்கள், வசதிகள் மற்றும் சிறப்புரிமைகள் என்பவற்றிற்கு உரித்துடையோர் ஆகின்றனர் ;

(இ) பார்வையற்ற மற்றும் கட்புலரீதியில் குறைபாடுடைய ஆட்கள் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும் வரையறைகளுக்கும் அமைய வாடகைக்கு அல்லது குத்தகைக்கு முனைவு செய்யப்பட தங்குமில்ல இடவசதிகள் எல்லாவற்றுக்கும் பொதுமக்களிற்குள்ளாவாறான முழுமையான மற்றும் சமமான அணுக்கத்திற்கு உரித்துடையோராதல் வேண்டும்.

7. இவ்விதிகளின் நோக்கங்களுக்காக,

''கட்புலரீதியிலான குறைபாடு'' என்பது, சாதாரண மூக்குக்கண்ணாடி அல்லது தொடுவில்லைகளினால் சரிப்படுத்தப்படமுடியாதான பார்வைக்குறைவு எனப்பொருள்படும் என்பதுடன் இது குறித்த சில அல்லது எல்லா பணிகளிற்குமான ஒரு ஆளினுடைய ஆற்றலைக் குறைக்கின்றது. இது பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது.

(i) உருவங்களை தெளிவாகவும் வேறுபடுத்தியும் பார்ப்பதற்கான ஆற்றலின்மை ;

(ii) பார்வை இழப்பு ;

(iii) ஒளியிலான சிறிய மாற்றங்களை கண்டுபிடிப்பதற்கான ஆற்றலின்மை ;

(iv) நிறக்குருடு ;

(v) ஒளி உணர்திறன்.

6- 487

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.